

இனமானப் பேராசிரியர் அவர்களின் 102 வது பிறந்தநாளையொட்டி, கழகத் தலைமை அலுவலகமான சென்னை – அண்ணா அறிவாலயத்தில், பேராசிரியர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு, கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன் அவர்கள் மலரஞ்சலி செலுத்தினார். கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, தலைமை நிலைய செயலாளர் பூச்சி எஸ்.முருகன், மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் ஈரோடு இறைவன், பகுதிச் செயலாளர் மா.பா.அன்புதுரை, வட்டச் செயலாளர் ராமு உள்ளிட்டோர் அப்போது உடனிருந்தனர்.



கிருஷ்ணகிரி மாவட்டம், கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியம், ராயக்கோட்டை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில், ரூ.1 கோடியே 26 இலட்சத்து 57 ஆயிரம் மதிப்பில் அரசு ஆரம்ப சுகாதார நிலைய கட்டிட கட்டுமானப் பணிகளை உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி , மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கே.எம். சரயு ஓசூர் சட்டமன்ற உறுப்பினர் ஒய்.பிரகாஷ், ஓசூர் மாநகராட்சி மேயர் எஸ்.ஏ.சத்யா, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை இயக்குநர் மரு.செல்வ விநாயகம் ஆகியோர் முன்னிலையில் நேற்று முன்தினம் (19.12.2023) துவக்கி வைத்தனர். உடன், கூடுதல் ஆட்சியர் திருமதி.வந்தனா கார்க் ஓசூர் மாநகராட்சி ஆணையாளர் திருமதி.டி.சினேகா, ஓசூர் சார் ஆட்சியர் செல்வி.பிரியங்கா உள்ளிட்ட பலர் உள்ளனர்.




நாமக்கல் மேற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் முன்னாள் கழக பொதுச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான இனமானப் பேராசிரியர் அவர்களின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரின் திருவுருவப் படத்திற்கு நாமக்கல் மேற்கு மாவட்டச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் தலைமையில் பள்ளி கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் ஆகியோர் பேராசிரியர் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இந்நிகழ்வில் மாநில இளைஞரணி துணைச் செயலாளர் சி.ஆனந்தகுமார், ஒன்றியக் கழகச் செயலாளர் வட்டூர் ஜி.தங்கவேல், மாவட்ட துணைச் செயலாளர் மயில்சாமி, நாமக்கல் தெற்கு நகரச் செயலாளர் ராணா ஆனந்த், திருச்செங்கோடு ஒன்றியக் குழு துணைத் தலைவர் ராஜவேல் (எ) ராஜபாண்டி, சார்பு அணி நிர்வாகிகள் ஆர்.பாலாஜி, பாலசுப்பிரமணியம், ரமேஷ், நவலடி ராஜா, கௌதம், சுந்தர், கருணா மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுடன் ஆலோசனை!

## புதுடெல்லி- தமிழ்நாடு இல்லத்தில் சந்தித்து உரையாடினார்!

புதுடெல்லி, டிச. 21 -

புதுடெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் சந்தித்துப் பேசினார்.

இச்சந்திப்பு சுமார் 40 நிமிடங்களுக்கும் மேலாக நீடித்தது.

சென்னை உள்ளிட்ட 4 மாவட்டங்களில் மிக்ஜாம் புயல், மழை பாதிப்பு மற்றும் தென் மாவட்டங்களில் கனமழை யால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு விரைந்து நிதி ஒதுக்ககோர வும், இந்தியா கூட்டணியின் ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்பதற்காகவும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் டெல்லி வருகை தந்துள்ளார்.

இந்நிலையில், டெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் நேற்று காலை சந்தித்துப் பேசினார்.

அப்போது முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், ‘உங்களில் ஒருவன்’ நூலின் ஆங்கில பதிப்பான “One Among You” புத்தகம் மற்றும் பூங்கொத்து அரவிந்த் கெஜ்ரிவால் அவர் களுக்கு கொடுத்து வரவேற்றார்.

இதனைத் தொடர்ந்து, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுடன் டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் அவர்கள் சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பு சுமார் 40 நிமிடங்களுக்கும் மேலாக நீடித்தது என்பது குறிப்பிட த்தக்கது.

இச்சந்திப்பின்போது, நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், ஆம் ஆத்மி எம்.பி. ராகவ் சத்தா உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

முன்னதாக, தமிழ்நாடு இல்லத்தில், காவல்துறை அணி வகுப்பு மரியாதையை டெல்லி முதல்வர் கெஜ்ரிவால் ஏற்றுக்கொண்டார்.

**பேராசிரியர் திருவுருவப் படத்திற்கு அரவிந்த் கெஜ்ரிவால் மலரஞ்சலி!**

இந்நிலையில், தமிழ்நாடு இல்லத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்துப் பேசிட வருகை தந்த டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் அவர்கள் இனமானப் பேராசிரியர் அவர்களின் 102வது பிறந்த தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

### மழை வெள்ளம்; மீட்பு - நிவாரணப் பணிகள் மேற்கொள்ள

# கூடுதல் ஹெலிகாப்டர்கள் அனுப்பி வைப்பீர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - ஒன்றிய பாதுகாப்பு அமைச்சருக்குக் கடிதம்

சென்னை, டிச.21 -

தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ள கூடுதல் ஹெலிகாப்டர்கள் அனுப்பக்கோரி ஒன்றிய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.

இது தொடர்பான அரசின் செய்திக் குறிப்பு வருமாறு:-

தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ள கூடுதல் ஹெலிகாப்டர்கள் அனுப்பிவைக்கக்கோரி ஒன்றிய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அவர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.12.2023) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் கடந்த இரண்டு நாட்களாக வரலாறு காணாத அளவில் மழை பெய்துவருகிறது. ஒருசில இடங்களில் 1871ஆம் ஆண்டுக்குப் பிறகு அதிக மழை பெய்துள்ளது. அதன் காரணமாக திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் வசிக்கும் சுமார் 40 இலட்சம் பேர் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தாமிரபரணி ஆற்றிலும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளதால் ஸ்ரீவைகுண்டம், தூத்துக்குடி நகரங்களில் நிலைமை மிகவும் மோசமாக உள்ளது என்றும் தனது கடித்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள தமிழ்நாடு அரசு அலுவலர்கள், மாநில பேரிடர் மீட்புக் குழு மற்றும் தேசிய பேரிடர் மீட்புப் படையினரை அங்கு அணி திரட்டியுள்ளோம் என்றும், பிற மாவட்டங்களிலிருந்து வரவழைக்கப்பட்ட நிவாரணப் பொருட்கள் இணைப்புச் சாலைகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ள காரணத்தால் மக்களுக்கு விநியோகிக்க முடியவில்லை எனவே, அவற்றை ஹெலிகாப்டர்கள் மூலம் மட்டுமே விநியோகிக்க இயலும் என்றும் அவர் அக்கடிதத்தில் குறிப்பிட்டு ள்ளார்.

வெள்ளத்தில் சிக்கியவர் களை மீட்பதற்கும், உணவுப் பொருட்களை விநியோகிக்கவும் விமானப்படையின் 4 ஹெகாப்டர்கள், கடற்படையின் 2 ஹெகாப்டர்கள் மற்றம் கடலோரக் காவல் படையின் 2 ஹெகாப்டர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. பெருமழையின் தாக்கம் அதிகமாக இருப்பதைக் கருத்தில் கொண்டு மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளக்கு கூடுதல் ஹெலிகாப்டர்கள் தேவைப்படுவதால், அதிகபட்ச அளவில் ஹெலிகாப்டர்களை அனுப்பி வைக்க தனது கடிதத்தில் முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

### 102வது பிறந்தநாள்: சென்னை - அண்ணா அறிவாலயம் - கழக அலுவலகத்தில்

# பேராசிரியர் திருவுருவப் படத்திற்கு - பொதுச் செயலாளர் துரைமுருகன் மரியாதை!

## அன்பகம் கலை - பூச்சி முருகன் பங்கேற்பு!

சென்னை, டிச. 21 -

தந்தை பெரியாரின் தொண்டராக பேரறிஞர் அண்ணாவின் தம்பியாக முத்தமிழறிஞர் கலைஞரின் தமையனாக, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தத்துவத் தலைமையாக, தன் வாழ்நாள் முழுவதும் அப்பழுக்கற்ற கொள்கைக் கோபுரமாக உயர்ந்து நின்ற இனமான பேராசிரியர் அவர்களின் பிறந்த நாளான நேற்று முன்தினம் (19-12-2023) மாலை, அண்ணா அறிவாலயத்தில் வைக்கப்பட்டிருந்த இனமானப் பேராசிரியர் திருவுருவப்படத்திற்கு கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன் அவர்கள், மலர்தூவி மரியாதை செய்தார்.

அதுபோது கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, தலைமை நிலையச் செயலாளர் பூச்சி எஸ்.முருகன், பகுதிச் செயலாளர் ஆயிரம் விளக்கு (கிழக்கு) மா.பா. அன்புதுரை, இலக்கிய அணி இணைச் செயலாளர் ஈரோடு இறைவன், வட்டச் செயலாளர் ராமன் ஆகியோர் உடனிருந்தனர்.

### நாடாளுமன்றத்தில் பாதுகாப்பு குளறுபடி: ஒன்றிய அரசு விளக்கம் அளிக்கக்கோரி முழக்கம்!

# மீண்டும் 70 எம்.பி.க்கள் இடைநீக்கம்!

புதுடெல்லி, டிச. 21 -

நாடாளுமன்றத்தில் ஏற்கனவே 92 எம்.பி.க்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்ட நிலையில்,

நேற்று முன்தினம் ஒரே நாளில் மேலும் 70க்கும் மேற்பட்ட எதிர்க்கட்சி எம்.பி.க்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்திற்குள் புகை குண்டு வீசப்பட்டது தொடர்பாக பிரதமர் மோடியும், உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் விளக்கம் அளிக்க வேண்டும், நாடாளுமன்ற பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் எனக் கோரி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இரு அவைகளிலும் பதாகைகளை ஏந்தி முழக்கங்களை எழுப்பினர்.

இதனால் ஏற்பட்ட அமளியை தொடர்ந்து ஏற்கனவே எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 92 பேர் சஸ்பெண்ட் செய்யப்பட்டனர்.

இதனைக் கண்டித்து நேற்று முன்தினம் முழக்கங்கள் எழுப்பப்பட்டன. புகை குண்டு வீச்சு குறித்து ஒன்றிய அரசு கட்டாயம் விளக்கம் அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

இதனால் இரு அவைகளிலும் அமளி நிலவியது. இதன்காரணமாக மக்களவை மற்றும் மாநிலங்களவையைச் சேர்ந்த 70க்கும் மேற்பட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டனர்.

மக்களவையில் எதிர்க்கட்சி எம்.பிக்கள் அனைவரும் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளனர்.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி எம்.பி.க்களே இல்லாத வகையில் தொடர்ந்து சஸ்பெண்ட் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதற்கு அரசியல் கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

### வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தூத்துக்குடி -திருநெல்வேலி மாவட்டங்களுக்கு

# உணவு - நிவாரணப் பொருட்கள் வழங்க சிறப்புக் குழுக்கள்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

*சென்னை, டிச. 21 -*

*வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களுக்கு உணவு மற்றும் நிவாரணப் பொருட்களை வழங்க சிறப்பு குழுக்கள் அமைத்து தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.*

*இது தொடர்பான அரசு செய்திக் குறிப்பு வருமாறு: -*

*கடும் மழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள தூத்துக்குடி மாவட்டத்திற்கும், திருநெல்வேலி மாவட்டத்திற்கும் உணவு மற்றும் நிவாரணப் பொருட்களை வழங்குவதற்காக சிறப்பு அலுவலர்களை நியமிக்க முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.*

*இதன்படி தூத்துக்குடி மாவட்டத்திற்கு கி.செந்தில் ராஜ், ஒருங்கிணைப்பு அலுவலராக தூத்துக்கு டியில் நியமிக்க ப்பட்டுள்ளார். அவரது தொலைபேசி எண். 7397770020. பாதுகாப்பு மற்றும் நிவாரணப் பொருட்களை வழங்கும் மையமாக தூத்துக்குடியில் உள்ள உள் விளையாட்ட ரங்கம் செயல்படும். தூத்துக்குடியில் உள்ள இந்தக் கட்டுப்பாட்டு அறை பொறுப்பு அலுவலர்கள் பின்வருமாறு:-*

*1.செல்வி. இரா. ஐஸ்வர்யா, கூடுதல் ஆட்சியர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தூத்துக்குடி, தொலைபேசி எண். 8973743830*

*2. ஒ.ராஜாராம், துணை ஆணையர், தூத்துக்குடி மாநகராட்சி, தொலைபேசி எண். 9943744803*

*3.திருமதி. எஸ். அமுதா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), தூத்துக்குடி, தொலைபேசி எண். 9445008155*

*இதே போல் திருநெல்வேலி மாவட்டத்தில் இப்பணிகளை ஒருங்கிணைக்க திருநெல்வேலி மாவட்ட நகராட்சி ஆணையர் நியமிக்கப் பட்டுள்ளார். அவரது பெயர் தாக்கரே சுபம் ஞானதேவ் ராவ், தொலைபேசி எண். 9442218000. அங்கு கூடுதலாக பின்வரும் அலுவலர்கள் இப்பணியினை ஒருங்கிணைப்பார்கள்.*

*1.சீ.கிஷன்குமார், உதவி ஆட்சியர் (பயிற்சி), திருநெல்வேலி, தொலைபேசி எண். 9123575120*

*2.ரேவதி, சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர், திருநெல்வேலி, தொலைபேசி எண். 9940440659*

*இப்பணிகளுக்கான மாநில ஒருங்கிணைப்பாளராக உள்துறை முதன்மைச் செயலாளர், திருமதி. பெ. அமுதா, செயல்படுவார்.*

*நிவாரணப் பொருள்கள் வழங்க விரும்புவோர் மற்றும் தன்னார்வலர்கள் மேற்காணும் அலுவலர்களைத் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.*

*இவ்வாறு தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.*



தஞ்சை வடக்கு மாவட்டம் கும்பகோணம் மேற்கு ஒன்றியம் (கும்பகோணம்) தொகுதிக்குட்பட்ட தி.மு.க. பொது உறுப்பினர் கூட்டம் ஆரியப்படைவீடு ஊராட்சி சமத்துவபுரத்தில் உள்ள பெரியார் அரங்கில் நடைபெற்றது. மாநில விவசாயத் தொழிலாளர் அணி தலைவரும், முன்னாள் பால்வளத்துறை அமைச்சருமான உ.மதிவாணன் மற்றும் மாநில கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை தலைவரும், கும்பகோணம் தொகுதி பார்வையாளருமான வண்ணை.அரங்கநாதன் ஆகியோர் கருத்துரை வழங்கினர். கும்பகோணம் மேற்கு ஒன்றியச் செயலாளர் சு.க.முத்துச்செல்வம், ஒன்றிய துணைச் செயலாளர்கள் டி.எஸ்.சண்முகம், தங்க.தியாகராஜன், அனிதா செல்வராஜ், ஒன்றியப் பொருளாளர் சி.இளங்கோ, சுவாமிமலை பேரூர்ச் செயலாளர் எஸ்.எம்.எஸ்.பாலசுப்பிரமணியன், மாவட்டப் பிரதிநிதிகள் டி.என்.கரிகாலன், டி.குணாளன், பகுதிப் பொறுப்பாளர்கள் டி.கோவிந்தராஜ், எ.செல்வராஜ், கே.வைக்கம் ஆகியோர் கலந்துகொண்டனர். கூட்டத்தில் முன்னிலையில் பி.எல்.ஏ 2, பி.எல்.சி நிர்வாகிகளுக்கு ஓ.எம்.ஆர். சீட் மற்றும் பி.எல்.சி. கையேட்டை வழங்கினர்.



திருச்சியில் பேராசிரியர் அவர்களின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு தில்லை நகர் சாஸ்திரி சாலையில் அமைந்துள்ள கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு அலுவலகத்தில் பேராசிரியர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு கழகத்தினர் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தினர். இந்நிகழ்வில் மாநகர அவைத் தலைவர் ராமலிங்கம், மத்திய மாவட்டப் பொருளாளர் துரைராஜ், மத்திய மாவட்ட துணைச் செயலாளர்கள் முத்து செல்வம், விஜய ஜெயராஜ், கருணாநிதி, டோல்கேட் சுப்ரமணி, மாநகர துணைச் செயலாளர் பாலமுருகன் மற்றும் கழக நிர்வாகிகள் கண்ணன், நாகராஜ், தர்மசேகர், கலைச்செல்வி, சர்ச்சில் கருணாமூர்த்தி, கருத்து கதிரேசன், தோளூர்பட்டி ரவி உள்ளிட்ட பொதுக்குழு உறுப்பினர்கள், மாமன்ற உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர்.